**சென்ரல் எஞ்சினியரிங் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டட் - 2022**

-----------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சென்ரல் எஞ்சினியரிங் சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்

தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கம்பஹா தள அலுவலகத்தில் நடாத்தப்பட்ட சொத்து மெய்மையாய்வின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்களின் பெறுமதி ரூபா 20.18 மில்லியனாக இருந்த போதிலும் ஈஆர்பி முறைமையின் பிரகாரம், அந்த அலுவலகத்தில் உள்ள சொத்துகளின் கிரயம் ரூபா 19.13 மில்லியனாக இருந்ததுடன் புத்தக பெறுமதி ரூபா 3.38 மில்லியனாகும். கணக்காய்வின் போது, களஞ்சியப் பொறுப்பாளரால் பேணப்படும் சொத்துப் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட உருப்படிகளின் விபரங்கள், உருப்படிகளின் | ஈஆர்பி முறைமையில் காட்டப்பட்டுள்ள சொத்து உருப்படிகளுக்கும் பௌதீக ரீதியாக இருக்கும் சொத்து உருப்படிகளுக்கும் இடையே வேறுபாடொன்று இருந்தமை இனங்காணப்பட்டது. ஈஆர்பி குழுவுடன் கலந்தாலோசித்து அவற்றை சரிசெய்வது தொடர்பில் நாங்கள் பணியாற்றி வருகிறதுடன் விரைவில் செயன்முறை பூர்த்தி செய்யப்படும் என்று நம்புகிறோம். | ஈஆர்பி முறைமையில் காட்டப்பட்டுள்ள சொத்து உருப்படிகளுக்கும் பௌதீக ரீதியாக இருக்கும் சொத்து உருப்படிகளுக்கும் இடையே வேறுபாடு இருப்பதால் வேறுபாட்டைக் கண்டறிந்து சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| எண்ணிக்கை மற்றும் பெறுமதி என்பன ஈஆர்பி முறைமையுடன் இணக்கம் செய்யப்பட முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனவே, கம்பஹா தள அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 19.13 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்களின் கிரயத்தின் சரியான தன்மையை கணக்காய்வின் போது சரிபார்க்க முடியவில்லை. | | |
| (ஆ) அனைத்து பெறுமதி சேர் வரி (வற்) கொடுப்பனவுகளும் கம்பனியின் தலைமை அலுவலகத்தால் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அந்த வற் கொடுப்பனவுகளின் கணக்கீட்டிற்கு அட்டுறு எண்ணக்கரு பயன்படுத்தப்படுகிறது. 2022 திசெம்பர் மாதத்திற்காக தலைமை அலுவலகங்கள் சமர்ப்பித்த ஆவணங்களில் காட்டப்பட்டுள்ள வற் செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய பெறுமதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான தொகைகளுக்கு இடையே ரூபா 12.74 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாட்டை இணக்கம் செய்வதற்கு கம்பனி மாதாந்த கணக்கிணக்க செயன்முறையை பேணியிருக்கவில்லை. | வற் கொடுப்பனவு காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறதாலும் கணக்கீட்டு எண்ணக்கருவின் பிரகாரமும் கணக்கீடானது அட்டுறு அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது, கணக்குகளில் உரிமை கோரப்படாத உள்ளீட்டு வற் எப்போதும் காணப்படுகிறது. ஈஆர்பி முறைமையில் இருந்து அந்தத் தொகைக்கான அறிக்கையை உருவாக்குவதற்கு ஈஆர்பி முறைமையை மேம்படுத்துமாறு கோரப்பட்ட போதிலும், தற்போதுள்ள ஈஆர்பி ஊழியர்களின் பற்றாக்குறையால் அது தாமதமாகி வருகிறது. | கணக்கிணக்கக் கூற்றுக்களின் மூலம் காசு அடிப்படையிலும், அட்டுறு அடிப்படையிலும் வற்றிலுள்ள வேறுபாடுகளுக்கான காரணங்களை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு இல. 2.3.6 மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ்) 16 இன் 51 ஆம் பந்தியில் உள்ள ஏற்பாடு ஆகியவற்றின் பிரகாரம் கம்பனி வருடாந்தம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (பிபிஈ) மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தை மதிப்பாய்வு செய்கிறது என்பதை குறிப்பிடுகிற போதிலும் கம்பனியால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துகளின் கிரயம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 523.57 மில்லியனாக இருந்தது. ஆனால் நியம ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த சொத்துக்களின் பயன்தரு பொருளாதார | இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மற்றும் அடுத்தடுத்த இனங்காணலிற்காக கிரய மாதிரியைப் பயன்படுத்துகிறோம். எனவே, கம்பனி மீள்மதிப்பீட்டு மாதிரியைப் பயன்படுத்துவதில்லை. எனினும், எல்கேஏஎஸ் 16 இன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக | எல்கேஏஎஸ் 16 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துகளின் பயன்தரு பொருளாதார ஆயுட்காலத்தை கம்பனி மீள்மதிப்பீடு செய்ய வேண்டியதுடன் எல்கேஏஎஸ் 8 இன் பிரகாரம் மதிப்பீட்டு |

| | | |
|---|---|---|
| ஆயுட்காலத்தின் மதிப்பிடப்பட்ட பிழையை சீர்செய்வதன் மூலம் எல்கேஏஎஸ் 08 இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சரியான கொண்டுசெல்லும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வழங்கப்படவில்லை. | பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் பற்றிய தகவலை நாங்கள் வெளிப்படுத்தியுள்ளோம். | பிழைகளை சீர்செய்ய வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது, தள அலுவலகங்களுக்கு இடையேயான உள்ளக கொடுக்கல்வாங்கல்கள் அகற்றப்பட வேண்டிய போதிலும் தள அலுவலகத்தின் உப அலகுகள் மற்றும் தள அலுவலகங்களுக்கு இடையில் பெறவேண்டிய மீதிகளாக நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 16.46 மில்லியன் காட்டப்பட்டுள்ளது. மேலும் கம்பனியின் ஒவ்வொரு தள அலுவலகமும் வாடகை அடிப்படையில் வாகனங்கள் மற்றும் நிர்மாண உபகரணங்களை வழங்குவதன் மூலம் உள்ளக ரீதியாக ஈட்டப்பட்ட வாடகை வருமானமாக ரூபா 113.49 மில்லியன் கம்பனியின் வருடாந்த வருமானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. | நாங்கள் 2022 இல் அலகுகளுக்கிடையேயான கொடுக்கல்வாங்கல்களை அகற்றியுளளோம், மேலும் அடுத்த ஆண்டு விடுபட்ட தொகைகளை அகற்றுவதற்கு எதிர்பார்க்கிறோம். பெரும்பாலான கொடுக்கல்வாங்கல்கள் அலகுகளுக்கு இடையேயான நடைமுறைக் கணக்குகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, அலகுகளுக்கு இடையேயான நடைமுறைக் கணக்குகளை சமப்படுத்தும் போது பல கொடுக்கல்வாங்கல்கள் தானாகவே நீக்கப்படும். | ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தள அலுவலகங்களுக்கும் அந்த பிரிவுகளுக்கும் இடையே இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் பணியகத்தின் பெறவேண்டிய நிறுத்திவைத்தல் பண மீதியிலிருந்து தாய் கம்பனியால் ரூபா 6.63 மில்லியன் பதிவழிக்கப்பட்ட போதிலும் கம்பனியின் தொடர்புடைய பெறவேண்டிய நிறுத்திவைத்தல் பணம் தொடர்பாக தேவையான சீராக்கங்களை கம்பனி இனங்கண்டு மேற்கொண்டிருக்கவில்லை அல்லது வெளிப்படுத்தல்களைச் செய்திருக்கவில்லை. | இந்த நிறுத்திவைத்தல் பண மீதி தொடர்பாக CESL பதிவழிப்பு செய்திருக்கவில்லை, மேலும் அடுத்த ஆண்டு அவ்வாறு செய்வோம் என நம்புகிறோம். | தாய் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கம்பனியின் பெறவேண்டிய மீதிகளை பதிவழிப்பு செய்வது துணைக்கம்பனியின் மீதிகளை பாதிக்கின்றதால் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்**

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா மில்லியன் | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா மில்லியன் | வேறுபாடு ரூபா மில்லியன் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| பெறவேண்டிய நிறுத்திவைத்தல் பணம் | **2,009.06** | **2,005.13** | **3.93** | இது ஜாவத்தை அலுவலகத்திற்கு சொந்தமானது, மேலும் இந்த வருடத்தில் இதனை சரிபார்த்து சீர்செய்வோம் என நம்புகிறோம். | இந்த வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்த பின்னர் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.5.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகளின்மை**

| | கிடைக்கக்கூடிய விடயம் | தொகை ரூபா மில்லியன் | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | அட்டுறு செலவினங்கள் | 11.77 | மொத்த பெறுமதி தொடர்பான சான்றுபடுத்தப்பட்ட விலைப்பட்டியல்கள், உப ஒப்பந்ததாரர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அடுத்தடுத்த கொடுப்பனவுகளின் விபரங்கள். | அறிக்கையிடப்பட்ட கிரயங்களுக்கான விலைப்பட்டியல்கள் வழங்குநர்களிடமிருந்து எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் உப ஒப்பந்ததாரர்களால் பதிவு செய்யப்பட்ட அளவீடுகள் செலவினத்தில் பதிவு செய்யப்பட்ட தொகைகளுடன் இணங்கப்பட்டிருந்தன. | அட்டுறு செலவினங்களின் சரியான தன்மை மற்றும் இருக்கும் தன்மை என்பவற்றை சரிபார்ப்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அட்டுறு செலவினங்கள் | 3.04 | விரிவான பட்டியல்கள், ஆதார ஆவணங்கள் | கருத்துரை வழங்கப்படவில்லை. | அட்டுறு செலவினங்களின் சரியான தன்மை மற்றும் இருக்கும் தன்மை என்பவற்றை சரிபார்ப்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தொடர்புடைய கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகை (அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை) | 23.96 | விரிவான பட்டியல்கள், ஆதார ஆவணங்கள் | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிலுவை மீதிகளின் சரியான தன்மை மற்றும் இருக்கும் தன்மை என்பவற்றை சரிபார்ப்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வியாபார மீதி ரூபா 3,778.89 மில்லியனாக இருந்ததுடன் அந்த மீதியில், சான்றுபடுத்தப்பட்ட விலைப்பட்டியல்கள் தொடர்பான கடன்பட்டோர் மீதி ரூபா 2,236.52 மில்லியனாகும். எனினும், தாய்க் கம்பனி அதாவது மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் (CECB) முன்னைய ஆண்டுகளைப் பாதிக்கிற மீளாய்வாண்டில் நட்டக்கழிவு ஏற்பாடாக ரூபா 959.08 மில்லியனை மேற்கொண்டுள்ளது. அதனுடன், கம்பனி தொடர்பான நட்டக்கழிவுகளுக்கான ஏற்பாட்டை கம்பனி இனங்காண வேண்டிய போதிலும் கம்பனி அனுராதபுரம் தள அலுவலகம் தொடர்பாக ரூபா 25.51 மில்லியனை மாத்திரமே வழங்கியுள்ளது.<br><br>கம்பனியின் வடக்கு மற்றும் மத்திய தள அலுவலகங்களினால் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான தாய் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் நட்டக்கழிவுகளுக்கான ஏற்பாடொன்றாக ரூபா 98.42 மில்லியனை தாய்க் கம்பனி மேற்கொண்டிருந்தமை கணக்காய்வு சோதனையில் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் இது தொடர்பாக கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே, கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் தாய் கம்பனியிடமிருந்து பெறவேண்டியவைகளாகக் காட்டப்பட்டுள்ள மீதிகளின் அறவிடும் தன்மையின் ஆபத்தை கணக்காய்வின் போது நிராகரிக்க முடியாது. | இக் கம்பனி இந்த ஆண்டிற்காக ரூபா 25.51 மில்லியன் நட்டக்கழிவிற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது, இதனால் 2022 ஆம் ஆண்டுக்கான செலவினங்கள் இனங்காணப்பட்டுள்ளன.<br><br>இது CESL ஆல் செய்யப்பட வேண்டிய ஒரு ஏற்பாடாகும். மேலும் 2022 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட ஒரு உருப்படியின் காரணமாக இது இந்த ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. CECB வழங்கிய நிதியேற்பாடு ரூபா 959 மில்லியனாக இருந்தது, CESL இல் ஒதுக்கீட்டு தொகை ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதால், முன்னைய ஆண்டுகளுடன் சீர்செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லை.<br><br>மத்திய தள அலுவலகத்தின் கடன்பட்டோர் மீதிக்காக எந்தவித நட்டக்கழிவு ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை, அடுத்த ஆண்டு அதைச் செய்வோம் என்று நம்புகிறோம். மேலும், CESL இற்கு முழு பெறுமதியையும் ஒதுக்குவதற்கு எந்த உரிமையும் இல்லை. மேலும் CECB இன் கடன்பட்டோரைத் தீர்ப்பதற்கான CECB இன் பொறுப்பு CECB இன் அறவிடமுடியாக்கடன் ஏற்பாடுகள் காரணமாக ஆபத்தில் இல்லை என்று வலியுறுத்தப்படுகிறது. | CECB பகுதியளவு கடன் வழங்குவதால், கம்பனியின் கடன்பட்டோர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை நிதிக்கூற்றுக்களில் சரியான முறையில் சீர்செய்து வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஏனைய வெளித் தரப்பினர்களிடமிருந்து கம்பனிக்கு பெற வேண்டிய ரூபா 2,395.66 மில்லியன் வியாபார பெறவேண்டிய மீதியில் மீளாய்வாண்டிற்கான 1 சதவீதமாக உள்ள ரூபா 24.59 மில்லியன் தொகைக்கு மாத்திரமே மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் பெறப்பட்டிருந்தன. | கடன்பட்டோரிற்கான மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன, ஆனால் பதில் கடிதங்களை பெறுவதில் தாமதம் ஏற்படுகிறது. | கடன்பட்டோரிடம் இருந்து மீதியை கண்டறிவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மொத்த கடன்பட்டோர் மீதி ரூபா 3,778.89 மில்லியன் ஆகும், அதில் ரூபா 417.55 மில்லியன் மற்றும் ரூபா 53.3.3 மில்லியன் முறையே 03 ஆண்டுகளுக்கு மேலாகவும் 05 ஆண்டுகளுக்கு மேலாகவும் நிலுவையாக இருந்தன. அதே வேளை பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 273.51 மில்லியன் கடன்பட்டோர் மீதிகளும் அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு நீண்டகாலமாக அறவிடப்படாமல் இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | நிலுவையாக உள்ள கடன்பட்டோர் மற்றும் நிறுத்திவைத்தல் பண மீதிகளை அறவிடுவதற்கு, கடன்பட்டோர் மீதிகள் மற்றும் பெறவேண்டிய மீதிகளைள் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்தல், பெறவேண்டிய மீதிகள் தொடர்பான விலைப்பட்டியல்களை சான்றுபடுத்தி, செயன்முறையை விரைவுபடுத்துதல் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைமுறிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல், அமைச்சு செயலாளர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினருக்கு அறிவித்து பின்தொடர் நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற சிறந்த முயற்சிகளை கம்பனி மேற்கொள்ளுகிறது. | மேலதிக தாமதமின்றி நிலுவையாகவுள்ள மீதிகளை அறவிடுவதற்கு பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய நிறுத்திவைத்தல் பணம் ரூபா 3,077.62 மில்லியனாகும். அதில், பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களின் பூர்த்திசெய்தல் திகதிகளின் விபரங்கள், காலதாமதமான நிறுத்திவைத்தல் பணத்திற்கான கணிப்பீட்டிற்காக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு மூலமான தெரிவுச் | -மேற்படி- | நிர்மாண செயற்திட்டங்கள் தொடர்பான விரிவான தகவல் முகாமைத்துவ முறைமையை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் செயற்திட்ட பூர்த்தி செய்தல் திகதியின் பிரகாரம் நிறுத்திவைத்தல் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான ரூபா 244.83 மில்லியனில் ரூபா 47 மில்லியன் மற்றும் ரூபா 31.04 மில்லியன் முறையே 3 முதல் 5 ஆண்டுகளாகவும் 5 ஆண்டுகளுக்கு மேலாகவும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களால் முறையான அறவீட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் நிலுவையாக உள்ளன.

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பணம் என்பன முறையே ரூபா 1,534.27 மில்லியன் மற்றும் ரூபா 729.57 மில்லியன் தொகையாகும். செயற்திட்டபூர்த்தி செய்தல் திகதிகளின் விபரங்கள் வழங்கப்படாததால், செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பண மீதிகளிற்கான வயதுப் பகுப்பாய்வைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. கணக்காய்விற்காக வழங்கப்பட்ட வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 620.63 மில்லியன் தொகையான கடன்கொடுத்தோர் 2 முதல் 5 வருடங்கள் வரை செலுத்தப்படாமல் இருந்தது. | எமது வழங்குநர்கள் பெரும்பாலான நேரங்களில் 1 வருடத்திற்கும் குறைவான கடன் காலங்களை வழங்குகிறார்கள். எனவே, அனைத்து கடன்கொடுத்தோரும் ஒரு வருடத்திற்குள் தீர்வுசெய்யப்படும் நோக்கத்துடன் நடைமுறைப் பொறுப்புக்களாக கருதப்படுகிறார்கள். எமது வாடிக்கையாளர்களிடம் இருந்து பணம் அறவிடப்படாமல், தொடர்புடைய கடன் காலத்திற்குள் கடன்கொடுத்தோரை தீர்க்க முடியாது. | நிலுவையாக உள்ள மீதிகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உப ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்கு முகாமைத்துவ தகவல் முறைமை பேணப்பட வேண்டும், அதன் பிரகாரம் செயற்திட்ட பூர்த்தி செய்தல் திகதியின் பிரகாரம் நிறுத்திவைத்தல் தொகை மீள்நிதியிடப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல்களின் 5.4.4 (iii) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் செயற்திட்டப் பணிகள் 90 சதவீத பூர்த்தி செய்தல் மட்டத்தை அடைவதற்கு முன்னர் பெறப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் முழுமையாகத் தீர்க்கப்பட வேண்டும். எனினும், 06 தள அலுவலகங்களின் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் 90 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண செயற்திட்டங்கள் தொடர்பாக பெறப்படட்ட ரூபா 211.13 மில்லியன் தொகையான அத்தகைய முற்பணங்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்குகளில் தீர்க்கப்படாமல் இருந்தன. மேலும், இந்த மீதிகள் தீர்க்கப்படாததற்கான காரணங்கள் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை. | தீர்க்கப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் இறுதி விலைப்பட்டியல்கள் வழங்கப்பட்ட பின்னர் தீர்ப்பனவு செய்யப்படும். | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் பதவியணி உறுப்பினர்கள் மற்றும் தாய் கம்பனியான மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் (CECB) அம்பாறை தள அலுவலகத்தில் நலன்புரிச் சங்கத்தை உருவாக்கி 2019-2022 இற்கு இடைப்பட்ட 4 வருட காலப்பகுதியில் உப ஒப்பந்த அடிப்படையில் கம்பனியின் செயற்பாடுகளுக்காக தொழிலாளர் மற்றும் பொருட்களை வழங்கியிருந்தமை உள்ளக கணக்காய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 152.16 மில்லியன் தொகை செலுத்தப்பட்டது. ஆனால் இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ்) 24 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தொடர்புடைய தரப்பினர் உறவின் தன்மை மற்றும் உறவின் சாத்தியமான தாக்கம் என்பவற்றை விளங்கிக்கொள்வதற்கு கம்பனிக்கும் நலன்புரிச் | அம்பாறை தள அலுவலகத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட நலன்புரிச் சங்கம் CECB மற்றும் CESL ஆகிய இரு உறுப்பினர்களாலும் இணைந்து உருவாக்கப்பட்டது. இது CESL ஆல் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுடன் தொடர்புடைய சில வழங்கல்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றியுள்ளது.<br><br>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் இந்த தள அலுவலகத்தில் நலன்புரி எண்ணக்கரு நிறுத்தப்பட்டுள்ளது. | தொடர்புடைய தரப்பினருக்கு இடையேயான கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படையானதாக இருக்க வேண்டும். மேலும் பொருந்தக்கூடிய நிதிக்கூற்றுக்களில் அவற்றை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சங்கத்திற்கும் இடையிலான கொடுக்கல்வாங்கல்கள், அனைத்து கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிலுவையாக உள்ள மீதிகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, இந்த கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படைத்தன்மையுடன் சாதாரண வணிகத்தின் போது நடந்ததா என்ற அபாயத்தை கணக்காய்வின் போது நிராகரிக்க முடியாது. | | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தாய்க் கம்பனிக்கு அதாவது மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்திற்கு (CECB) செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,538.07 மில்லியன் மீதி காட்டப்பட்டது, மேலும் இந்தத் தொகையில் வாகன வாடகைக் கட்டணம், நிலையான சொத்துகளின் வாடகைக் கட்டணங்களின் பெறுமதி மற்றும் பங்கு பரிமாற்றம், தற்காலிகக் கடன்கள் என்பன உள்ளடங்குகின்றன. எனினும், இந்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக இரு நிறுவனங்களுக்கு இடையே சரியான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட உடன்படிக்கைகள் பேணப்படவில்லை. இந்த மீதியைத் தீர்ப்பதற்கு பயனுள்ள நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்காதமையும் 2017 முதல் இந்த மீதி தொடர்ந்து அதிகரித்து வருகின்றமையும் மேலும் அவதானிக்கப்பட்டது, மேலும், 2023 யூன் 30 வரை இந்த நிலுவையாகவுள்ள மீதி மீது கம்பனி வட்டி எதனையும் திரட்டியிருக்கவில்லை. | செயற்திட்டங்களின் காசுப்பாய்ச்சலை மோசமாக பாதிக்கும் நாட்டில் நிலவும் பாதகமான சூழ்நிலை காரணமாக கம்பனிகளுக்கு இடையேயான நடைமுறைக் கணக்கு மீதிகள் அதிகரித்துள்ளன. மேலும், பங்குகளை வழங்குவதன் மூலம் CECB உடன் இணங்கும் மீதியை மூலதனமாக்குவதற்கான வழியை இனங்காண்பதற்கு கம்பனி நீண்டகால நிலுவை மீதிகளை மதிப்பாய்வு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. | பல்வேறு சேவைகளை வழங்குவது தொடர்பாக கம்பனிக்கும் பணியகத்திற்கும் இடையே முறையான உடன்படிக்கைகளை செய்து கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மேலும் மீதி இணக்கக் கூற்றுக்கள் நியாயமான காலத்திற்கு ஒருமுறை தயாரிக்கப்பட வேண்டும். |

**1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் ரூபா | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பொது நிறுவனங்களின் நல்லாளுகைக்கான செயற்பாட்டு கையேடு | | | |
| (i) 4.3 (iii) ஆம் பந்தி | அனைத்து இருப்பு பெறுவனவுகள் மற்றும் வழங்கல்களை முகாமை செய்வதற்கு ஒரு முறையான சரக்கிருப்பு முகாமைத்துவ முறைமை பேணப்பட வேண்டிய போதிலும் கம்பனி பயன்படுத்தும் ஈஆர்பி முறைமை முறையான சரக்கிருப்பு வயதுப் பகுப்பாய்வு அறிக்கைகளை உருவாக்குவதற்கு வசதியளிக்கவில்லை. இதன் விளைவாக, காலாவதியான, மெதுவாக நகரும் மற்றும் நகராத பொருட்களை இனங்காண முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஈஆர்பி முறைமை மூலம் சரக்கிருப்பு வயதுப் பகுப்பாய்வு கிடைக்கவில்லை. ஆனால் அனைத்து காலாவதியான இருப்புக்களும் வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பின் போது ஒரு சுதந்திரமான தரப்பினரால் கண்காணிக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | ஈஆர்பி முறைமையை பயன்படுத்தி சரக்கிருப்பு வயது பகுப்பாய்வு அறிக்கையை உருவாக்குவதற்கு முறைமை அளவுருக்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 9.3 (i) ஆம் பந்தி | கம்பனியில் பல்வேறு பதவிகளுக்கு பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட | கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் 2022.02.24 இல் முகாமைத்துவ சேவைகள் | ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்து |

| | | | |
|---|---|---|---|
| | ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் இருக்க வேண்டிய போதிலும் அத்தகைய திட்டம் 2023 ஏப்ரல் 30 வரையிலும் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்டதுடன் 2022.09.06 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. | உடனடியாக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2019 திசெம்பர் 31 ஆம் திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2023 மே வரை கம்பனி அதன் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அதன் வணிகச் சேவைகளை வழங்குவதற்கும் இலத்திரனியல் அரசாங்க பெறுகை முறைமையில் பதிவு செய்யப்படவில்லை. | இலத்திரனியல் அரசாங்க பெறுகை முறைமை பதிவு செயன்முறைப்படுத்தப்படும். | அரசாங்கத்தின் இலத்திரனியல் பெறுகை முறைமையில் பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 58.39 மில்லியன் நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 138.91 மில்லியன் ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 197.3 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய கணக்கீட்டு காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது நிர்மாண வருமானம் 24% ஆல் குறைவடைந்தமை, விநியோக செலவினங்கள் 320% ஆல் அதிகரித்தமை மற்றும் நிர்வாக செலவினங்கள் 11% ஆல் அதிகரித்தமை என்பன இவ்வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின உருப்படிகளின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| **விபரம்** | **2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | **2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | **வேறுபாடு {சாதகமானது/ (பாதகமானனது) }** | **சதவீதம்** |
|---|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **(%)** |
| **மொத்த வருமானம்** | **6,487.46** | **8,333.31** | **(1,845.85)** | **(22)** |
| நிர்மாண வருமானம் | 6,332.57 | 8,298.38 | (1,965.81) | (24) |
| **மொத்த செலவினம்** | **850.12** | **736.83** | **113.29** | **(15)** |
| விற்பனை மற்றும் விநியோக செலவினங்கள் | 43.43 | 10.32 | (33.11) | 320 |
| நிர்வாக செலவினங்கள் | **806.68** | **726.51** | **(80.17)** | **11** |

| | | | | |
|---|---|---|---|---|
| அஸ்பால்ற் இலாபம்/(நட்டம்) | (36.59) | (60.75) | 24.16 | 39.76 |
| நிதி வருமானம் | 320.91 | 128.72 | 192.19 | 149 |
| நிதி கிரயம் | 7.98 | 12.71 | (4.73) | (37) |

(i) கட்டுமானத் துறையின் பின்னடைவு, கட்டுமானப் பொருட்களின் விலை அதிகரிப்பு, வழங்குநர்களால் கடன் அடிப்படைக்கு பொருட்களை வழங்குவதில் கட்டுப்பாடு, எரிபொருள் மற்றும் மூலப்பொருட்கள் கிடைக்காதது, நிர்மாண நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தின் கட்டுப்பாடு என்பன முக்கியமாக நிர்மாண செயற்திட்டங்கள் தாமதமாவதற்கும், நிறுத்தப்படுவதற்கும், தொடங்கப்படாமல் இருப்பதற்கும் காரணமாக அமைந்தது. இதன் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு நிர்மாண வருமானம் 24% ஆல் குறைவடைந்துள்ளது.

(ii) இந்த ஆண்டில் விற்பனை மற்றும் விநியோகச் செலவினம் 320% அதிகரித்தது, முக்கியமாக ரூபா 41 மில்லியன் வியாபார பெறவேண்டிய மீதி அனுராதபுரம் தள அலுவலகத்தினால் பதிவழித்ததன் காரணத்தினாலாகும்.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்கான கம்பனியின் முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விகிதங்கள்** | **2022** | **2021** | **2020** |
|---|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | |
| மொத்தலாப விகிதம் (GP) (%) | 10.05 | 10.13 | 9.29 |
| செயற்பாட்டு இலாப விகிதம் (%) | -0.92 | 1.67 | -0.93 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA) (%) | **1.87** | **1.95** | 0.56 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | |
| நடைமுறை சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | **1.2**:1 | 1.2:1 | 1.2:1 |
| விரைவு சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1.1:1 | 1.1:1 | 1.1:1 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனி அதன் ரூபா 13,609 மில்லியன் மொத்த சொத்து அடிப்படையை பயன்படுத்தி மீளாய்வாண்டின் போது ரூபா 254 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை ஈட்டியிருந்தது. எனவே, மொத்த சொத்துக்கள் மீதான திரும்பலின் சராசரி விகிதம் 1.87 சதவீதம் மாத்திரமேயாகும். இந்த விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் குறைவாக இருந்தது. எதிர்வரும் காலத்தில் செயற்பாட்டு இலாபத்தை அதிகரிப்பதற்கு வளங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த ஒரு மூலோபாயத் திட்டத்தை முகாமைத்துவம் கொண்டிருக்க வேண்டிய போதிலும் அத்தகைய திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விற்பனை மற்றும் விநியோக செலவினங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் நிர்மாண வருமானத்தில் குறிப்பிடத்தக்க குறைவு காரணமாக இந்த ஆண்டில் செயற்பாட்டு இலாப விகிதம் எதிர்மறையாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்ட முகாமைத்துவத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக 59 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 68.5 மில்லியன் ஊழியர்களால் விலைப்பட்டியல்களில் இருந்து தாமதக் கட்டணங்களாக கழிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டங்களில், 2023 யூன் 30 வரை கோரிய காலத்தை நீடிப்பதற்கான 47 செயற்திட்டங்களுக்கு அங்கீகாரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை, மேலும் கணக்காய்வின் போது 7 செயற்திட்டங்கள் தொடர்பாக கழிக்கப்பட்ட ரூபா 2.1 மில்லியன் தொகை அறவிடப்பட முடியாத நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கால நீடிப்புக்களை அங்கீகரிப்பதற்கும், நிதியை விடுவிப்பதற்கும் நாங்கள் தொழில்தருநர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம், மேலும் கிடைக்கக்கூடிய அனைத்து மீதிகளையும் பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் பணியாற்றி வருகிறோம். | பயனுள்ள செயற்திட்ட முகாமைத்துவம் மூலம் கால நீடிப்பு அங்கீகாரங்களை பெற்றுக்கொள்வதற்கும், தமாதக் கட்டணங்களை கழிப்பதைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள 60 பேர்ச்சஸ் காணியை 30 வருட குத்தகை அடிப்படையில் சுவீகரிப்பதற்காக ரூபா 15.43 மில்லியன் ஒரே நேரத்தில் வாடகையாக அதிகாரசபைக்கு கம்பனி செலுத்தியுள்ளது. எனினும், 2023 யூன் 01 ஆம் திகதி வரையிலும் கம்பனி இந்த குத்தகையில் ஆதனம் தொடர்பாக அதிகாரசபையுடன் முறையான உடன்படிக்கையை செய்திருக்கவில்லை. மேலும், சப்ரகமுவ தள அலுவலகத்தை அமைப்பதற்கான கட்டிடத்தை கம்பனி இந்த காணியில் நிர்மாணித்திருந்ததுடன் முறையான உடன்படிக்கையை ஏற்படுத்தாமல் வாடகை மற்றும் நிர்மாணக் கொடுப்பனவு எதிர்காலத்தில் சர்ச்சைக்குரிய சூழ்நிலைகளுக்கு வழிவகுக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. | குத்தகை உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப்படும், மேலும் இந்த நிலைமையை சரியான நேரத்தில் பின்பற்றுவோம். | கம்பனி முழு குத்தகை வாடகையையும் செலுத்தியிருந்ததால், நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் உரிய உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) அஸ்பால்ற்/கிறஷர் பொறியை | இந்த இயந்திரங்கள் CECB | அஸ்பால்ற்/கிறஷர் |

| | | |
|---|---|---|
| இயக்குவதன் மூலம் 2022 ஆம் ஆண்டில் ரூபா 36.59 மில்லியன் நட்டம் கம்பனியால் அறிக்கையிடப்பட்டது. கம்பனி இந்த 5 இயந்திரங்களை கொத்மலை, அலிகந்துர, கலகல, தலாவ மற்றும் புத்தல மஹகொடயாய ஆகிய 5 இடங்களில் வைத்துள்ளது. எனினும், இந்த ஐந்து இயந்திரங்களின் பெறுமதி கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டிருக்காததுடன் அதன் செயற்பாட்டின் மூலம் ஈட்டப்பட்ட நட்டம் மாத்திரமே அறிக்கையிடப்பட்டுள்ளது. மேலும் பொலன்னறுவை (MKDP) தள அலுவலகத்திற்குச் சொந்தமான தலாவ அஸ்பால்ற் பொறி 2022 இன் முதல் இரண்டு மாதங்களில் மாத்திரமே இயக்கப்பட்டதுடன் ஏனைய நான்கு இயந்திரங்களும் 2022 ஆம் ஆண்டில் விளைவற்றிருந்தன. | இற்கு சொந்தமானவை என்பதால், அவற்றின் கிரயம் CECB இன் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரங்கள் 2022 ஆம் ஆண்டின் முதல் 2 மாதங்களில் மாத்திரமே இயக்கப்பட்டுள்ளன, மேலும் இந்த நட்டத்திற்கான முக்கிய காரணம் விளைவற்றிருந்த போதிலும் ஏற்படும் பராமரிப்பு கிரயங்கள் ஆகும். நிர்மாணத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும் இந்த நட்டத்தை பாதித்துள்ளது. | பொறியை இலாபகரமாக இயக்குவதற்கு கம்பனியின் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கம்பனி அதனது நிலையான சொத்துக்களை சரியாக குறியீடிட்டிருக்காததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,591.43 மில்லியன் கிரயமான PPE இன் வருடாந்த சொத்து மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு அந்த குறியீடுகள் ERP முறைமையில் உள்ள நிலையான சொத்து பதிவேட்டில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை, | கம்பனியின் ERP குழு நிலையான சொத்துக்களுக்கான குறியீட்டு முறைமையை உருவாக்கியுள்ளது. சமீபத்தில் உருவாக்கப்பட்ட ERP முறைமையின் சொத்து தொகுதியை ஏற்றுக்கொண்டதால் இந்த செயன்முறை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | ERP முறைமையை உருவாக்கும் போதும் PPE மீது சரியான மற்றும் போதுமான கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கும் சரியான குறியீடல் முறைமை தேவைப்படுகிறதுடன் சொத்து முகாமைத்தவ தொகுதியின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கும், முறைமையில் உள்ள தற்போதைய பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதன் மூலம் மேம்பாடுகளைச் செய்வதற்கும் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) கணக்காய்விற்கு வழங்கப்பட்ட | செயற்திட்டப் பணிகளை | ஒப்பந்த கிரயம் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்களின் பிரகாரம் கம்பனிக்கு ரூபா 667.42 மில்லியன், ரூபா 888.15 மில்லியன் மற்றும் ரூபா 973.30 மில்லியன் மொத்த நட்டம் முறையே 2022, 2021 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் இறுதியளவில் அதன் பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண செயற்திட்டங்களிலிருந்து ஏற்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டில் 47 நடைபெற்று வரும் நிர்மாண செயற்திட்டங்களில் இருந்து ரூபா 433.93 மில்லியன் நட்டம் அறிக்கையிடப்பட்டுள்ளது. இந்த நட்டங்கள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு நேரடியாக தாக்கம் செலுத்துவதால் இந்த நட்டங்களுக்கான காரணங்களையும் பொறுப்பானவர்களையும் கண்டறிந்து, இந்த பெரும் நட்டங்களை தணிப்பதற்கு முகாமைத்துவம் பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | பூர்த்தி செய்வதற்கு மதிப்பிடப்பட்ட நேரத்தை விட அதிக நேரம், மதிப்பிடப்பட்ட மூலப்பொருள் கிரயங்களை விட அதிக கிரயங்கள், அதிக மேந்தலை கிரயங்கள், முந்தைய நிலைகளில் பல தவறுகளை சீர்செய்தல், தொற்றுநோய் நிலைமை, கொடுப்பனவுகளில் தாமதம் போன்றவை ஏற்படுகின்றன. | நேரத்தை முகாமை செய்வதற்கும் நிர்மாண செயற்திட்டங்களால் ஏற்படும் நட்டங்களைக் குறைப்பதற்கும் கம்பனி பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்காக கம்பனி ரூபா 58.39 மில்லியன் செயற்பாட்டு நட்டத்தை சந்தித்துள்ளதுடன் இது முக்கியமாக அனுராதபுரம், ஊவா, தலைமை அலுவலகம் மற்றும் WP-2 தள அலுவலகங்கள் முறையே ரூபா 91.90 மில்லியன், ரூபா 18.75 மில்லியன், ரூபா 10.26 மில்லியன் மற்றும் ரூபா 6.5 மில்லியன் நட்டங்களை அறிக்கையிட்டதாலாகும். | -மேற்படி- | கம்பனியின் செயற்பாட்டு நட்டத்தை குறைப்பதற்காக அதன் நிதி, மனித மற்றும் ஏனைய பௌதீக வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு கம்பனியின் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |

### 3.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாடிக்கையாளர்களிடமிருந்து பெற வேண்டிய் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய மீதிகள் முறையே ரூபா 1,621.08 மில்லியன் மற்றும் ரூபா 3,244.41 மில்லியன் தொகையாகும் எனினும், கம்பனியால் மேற்கொள்ளப்படும் | இதற்கு முக்கிய காரணம், ஒப்பந்த பெறுமதி, விலைப்பட்டியல்களுக்கு ஏற்ப மாறாமல் இருப்பது தான். மேலும், பல மீதிகளை விட்டு, இறுதி விலைப்பட்டியல்கள் உறுதி செய்யப்படும் வரை | பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக நீண்ட கால நிலுவை மீதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கும் கணக்குகளில் சரியான |

| | | |
|---|---|---|
| செயற்திட்டப் பணிகள் பூர்த்தியடைந்தவுடன், வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டிய அல்லது வாடிக்கையாளர்களிற்கு செலுத்த வேண்டிய மீதிகள் இருக்கக்கூடாது. ஆனால் தீர்ப்பனவிற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படாததால், நிதிக்கூற்றுக்களில் பூர்த்தி செய்யப்பட்ட 62 செயற்திட்டங்கள் தொடர்பாக வாடிக்கையாளர்களிடமிருந்தும் வாடிக்கையாளர்களிற்கும் முறையே ரூபா 143.31 மில்லியன் மற்றும் ரூபா 20.6 மில்லியன் நிலுவையாக இருந்தன. விலைப்பட்டியல்களைச் சரியாகச் சமர்ப்பிக்காதமையே இந்த வேறுபாடுகளுக்கு முக்கிய காரணம் என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்த பெறுமதியை மாற்ற முடியாது. இந்த சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, முடிந்தவரை அவற்றை சீர்செய்வதற்கு நாங்கள் எதிர்நோக்குகிறோம். | சீராக்கங்களை மேற்கொள்வதற்கும், தாமதமின்றி வயதுப் பகுப்பாய்வைத் தயாரிப்பதன் மூலம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி தற்போது தள மட்டத்தில் கொள்வனவு செய்யப்படுகின்ற சிமெந்து, Reinforcement steel, Ready mix கொங்கிறீட் போன்ற ஏனைய பெரியளவிலான கொள்வனவுகளிற்காக மையப்படுத்தப்பட்ட பெறுகை முறையைப் பின்பற்றுகின்ற போதிலும் கம்பனியின் WP-2 தள அலுவலகத்தின் பெறுகை நடவடிக்கைகள் குறித்து நடாத்தப்பட்ட சோதனை கணக்காய்வின் போது தள அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட பெறுகை வரம்புகளை மீறாத வகையில் செயற்திட்டங்களின் மூலப்பொருள் தேவைப்பாடுகள் கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | நிர்மாணத் தொழிலில் சமீபகாலமாக நிலவும் நெருக்கடியால், தலைமை அலுவலகம் மூலம் பெரிய அளவிலான கொள்வனவுகளிற்காக கேள்வி கோர முடியாத நிலைமை உள்ளது. நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான ரெடி மிக்ஸ் கொங்கிறீட்டை கொள்வனவு செய்யும் போது, ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் தொடர்புடைய விபரக்குறிப்புகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும், மேலும் செயற்திட்ட தளத்திற்கு அருகில் உள்ள இடத்திலிருந்து அதைப் பெற்றுக்கொள்வதும் கட்டாயமாகும். இதன் காரணமாக, சிமெந்து பெறுகைக்கு அதே முறையைப் பின்பற்றுவது நடைமுறையில் கடினமாக உள்ளது. | செயற்திட்டங்களின் மூலப்பொருள் தேவைப்பாடுகள் பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட வேண்டும், தேவையில்லாமல் பெறுகை வரம்புகளை மீறாதபடி கட்டங்களாக பிரிக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும், மேலும் சாத்தியமான இடங்களில், மையப்படுத்தப்பட்ட பெறுகை முறைமையின் மூலம் நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பத்தரமுல்லை மற்றும் திகன தள | தள அலுவலகங்களின் | கம்பனியால் |

| | | |
|---|---|---|
| அலுவலகங்களின் 2021 ஆம் ஆண்டுக்கான பெறுகை நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சோதனையில், கொடுப்பனவு தாமதங்கள் மற்றும் நீண்டகால நிலுவை மீதிகள் காரணமாக கம்பனி வழங்கிய கூறுவிலைகளுக்கு பதிலளிப்பதில் வழங்குநர்கள் ஆர்வம் காட்டாத போக்கு அவதானிக்கப்பட்டது. எனவே வெளிப்படைத் தன்மை, சிக்கனம், காலக்கெடு மற்றும் பெறுகை நடவடிக்கைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு அதிக எண்ணிக்கையிலான கூறுவிலைகளை பெற்றுக்கொள்வதில் கம்பனி அதிக கவனம் செலுத்த வேண்டியமை மேலும் அவதானிக்கப்பட்டது. | பெறுகைக் குழுக்கள், முடிந்தவரை நிறுவனத்திற்கு அதிகபட்ச நன்மைகளை வழங்கும் வகையில் பெறுகை செயன்முறை மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துகின்றது. | வழங்குநர்களிற்கான கொடுப்பனவுகளை முகாமை செய்யும் போது வெளிப்படைத்தன்மை, சிக்கனம், காலக்கெடு மற்றும் பெறுகை நடவடிக்கைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு கூறுவிலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் இல்லாத பதவிகளுக்கு 17 ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்திருந்தது. | விசேட சபை அங்கீகாரத்தை பெற்ற பின்னரே ஊழியர்கள் பணிக்கமர்த்தப்பட்டனர். மேலும், நாளதுவரையாக்கப்பட்ட பதவியணியினர் எம்எஸ்டி இற்கு 2022.01.12 இல் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்படாத பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு செய்யக்கூடாது. |
| (ஆ) | 2016 சனவரி 01 முதல் 2020 யூன் 22 வரை அனுராதபுரம் செயற்பாட்டு அலுவலகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் மற்றும் தள அலுவலகம் எதிர்கொண்ட கடுமையான நிதி நெருக்கடி மற்றும் செயற்திட்டங்களில் ஏற்பட்ட நிதி இழப்புக்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அந்த நேரத்தில் பிரதம செயற்பாட்டு பொறியியலாளராக (COE) கடமையாற்றிய உத்தியோகத்தர் 2021 சனவரி 11 முதல் இடைநீக்கம் செய்யப்பட்டார், அதே நேரத்தில் அந்த உத்தியோகத்தர் எந்த | இது தொடர்பான ஆய்வுகளை தற்போதைய தலைவர் விரைவுபடுத்தியுள்ளார். மேலும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறு அப்போது பிரதம செயற்பாட்டு பெறியியலாளர் CECB இல் மீண்டும் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார் என்றும் CESL இல் எந்தப் பதவியும் வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. | இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் குறித்து முறையான விசாரணை நடாத்தப்பட்டு அறிக்கைகளின் அடிப்படையில் உரிய தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். |

விசாரணையும் இன்றி மீண்டும் இடைநீக்கம் செய்யப்பட்ட நாளில் இருந்து தாய் கம்பனியின் சேவையில் சேர்க்கப்பட்டார்.

எனினும், அனுராதபுர தள அலுவலகத்தில் நிதி முறைகேடுகள் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் எதுவும் 2023 யூன் 30 இற்குள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.